



குமுதம்
இலவசம்!
இந்த இதழுடன்
ஹாலோ ஷாம்பு
ஸாஷே ஒன்று.
27–10–94
தீபாவளி மலர்
நோவா
புதிய சித்திரத் தொடர்


# நோவா

கதை: சுஜாதா படம்: மருது





COMICS PDF TIMES



அதோ தூரத்தில் ஆபாவின் அரண்மனை





COMICS PDF TIMES




(தொடரும்)



COMICSPDFTIMES



உடனே கூப்பிடு மந்திரவாதி ரிமோவை!
ரிமோ வருகிறான்
அப்பனுக்கும், மகளுக்கும் வேற வேலையே இல்லை...
அந்தப்புரத்தில் ஆபாவின் செல்லமகள் ஷினோ. அவளைச் சுற்றிலும் விதவிதமான
ஹைடெக் விளையாட்டுப் பொருட்கள், இயந்திர மிருகங்கள்.



COMICS PDF TIMES

ரிமோ அவனுக்குத் தன்னுடைய சாதுர்யங்கள் அனைத்தையும் பயன்படுத்தி விதவிதமான விளையாட்டு பொம்மைகளை சிருஷ்டிக்கத் தொடங்கினான்.



# நோவா

**கதை: சுஜாதா**


**படம்: மருது**


முன்கதை: நோவா
தின் தலைவன் ஆபாவின்
மகள் வினோவிற்கு எதுவுமே
வில்லை. மந்திரவாதி ரிமோ
வனைக் கூப்பிட்டு, புதிதா
யாட பொம்மை வேண்டு
கேட்கிறாள். ரிமோ கொடு
திரக் கோமாளியும் அவ
பிடிக்கவில்லை.




COMICS RIP TIMES


ரிமோ
வினோத
வடிவங்கள்
தயாரித்தான்.
ஓவர் சைஸ்
கரடி
அதுவும் அவனுக்குப்
பிடிக்கவில்லை.
அடுத்த முயற்சியாக...
பாயும் புலி!
எல்லாமே
இளவரசியின்
சந்தோஷத்திற்
காகத்தான்


ராஜகுமாரி எதிலும் திருப்தியடையாதலால்...
விதவித பறக்கும் தட்டுக்களும்
ஸ்ஊம்ம்ம்ம்
ஸ்ஊம்ம்ம்
ரோபாட்களும் செய்து...



இளவரசியைப் பார்த்தான்.
ம்ஹீம்... எதுவும் பிடிக்கலை.
இளவரசி எழுந்து...
கேளிக்கை அறையில் இருந்த 3D விஷன் பெட்டியை...
நோக்கிச் சென்றாள்.
அதில் வந்த ஒரு காட்சி அவளைக் கவர்ந்தது.
—தொடரும்

# நோவா

கதை: சுஜாதா
படம்: மருது


### முன்கதைச் சுருக்கம்


ரீமோவின் ஹைடெக் விளையாட்டு பொம்மைகள் எதுவும் நோவாவின் இளவரசி வினோவைக் கவரவில்லை. அப்போது 'த்ரீவி' பெட்டியைப் பார்க்கிறாள்.







COMICS PDF TIMES



க்ளிங்
க்ளிங்
ராஜகுமாரி பார்க்காதீங்க!
க்ளிங்



முதலில் ஒரு பரிச்சயமில்லாத கிரகம் தெரிந்தது. நீல நிறத்தில் உருண்டையாக தொங்கும் தேன்கூடு போல ஒரு தேசம்.
அந்த தேசத்தில் வாழும் உயிரினங்களின் ஒன்றின் முகம். வினோ பரவசப் பட்டாள்.
உடல் உயரம், பக்கவாட்டுத் தோற்றம்...
எல்லாம் தெரிய..
அடுத்த முகம் சற்று வேறு பட்டிருந்தது. அதற்கடுத்த முகம் கண்களுக்கு முன் குவார்ட்ஸ் போல ஏதோ அணிந்திருந்தது.
—தொடரும்

கதை: சுஜாதா
படம்: மருது


இதுவரை: நோவா கிரகத்து இளவரசி வினோ தன்னுடைய ஹைடெக் விளையாட்டுகள் அலுத்துவிட்டதால், பூமி என்ற இரகத்தில் வாழ்பவர்களைத் திரி.வி. பெட்டியில் பார்க்கிறாள். ஆஸ்தான மந்திரவாதி கலக்கம் அடைகிறான்.




அவர்கள் நான்கு பேர் ஒரு பார்க்கில் பிக்னிக்
ரவீந்தர் வயது 25 கணிப்பொறி விற்பன்னன்
மொட்டை எனப்படும் பாலசுப்ரமணியம் விளம்பர கம்பெனியில் வேலை.
ராஜேஸ்வரி அதே விளம்பரக் கம்பெனியில் சித்திரங்கள் வரைபவள்.
டாக்டர். இளங்கோ நகரத்தில் பிரபல மருத்துவர்.






COMICS PDF TIMES



எதுவும் கிடைக்கும் சொல்!
தந்தையே! எனக்கு விளையாட பூமி எனும் கிரகத்திலிருந்து நான்கு மனித பொம்மைகள் வேண்டும்.
அவ்வளவுதானே! கூப்பிடு ரிமோ கிழவனை... ரிமோ! ரிமோ!!
என் இனிய இயந்திரக் காவலர்களே! என் மகளை மகிழ்விக்க பூமிக்கு ரிமோவுடன் சென்று அந்த நான்கு மனித பொம்மைகளை 25 நோவா நாட்களுக்குள் கொண்டு வாருங்கள். இது ஒரு பிரபஞ்ச ஆணை.
தொடரும்


முன்கதை:


நோவாவிலிருந்து தன் செல்ல மகளுக்காக மூன்று மனித பொம்மைகளைக் கடத்தி வருமாறு அதிபர் ஆபா கட்டளையிட மந்திரவாதி ரிமோ பயப்படுகிறான்.




தங்கள் புதிய சிருஷ்டியை நோவா மக்கள் வியப்புடன் பார்த்தார்கள்.
அந்த இயந்திரக் கப்பல் உருவாகியது.
ஒளியின் வேகத்தை மிஞ்சக்கூடிய திறமை படைத்தது அந்தக் கப்பல்.


ரிமோவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப் பட்டது.
ஆனால் ரிமோவுக்கு பயம்.
உடனே என் குருவைப் பார்க்க வேண்டும்.
பூமிக்குப் போக வேண்டுமா? என்ன தொந்தரவு இது?





COMICS PDF TIMES


# ஜநாவா


கதை: சுஜாதா
படம்: மருது


பூமிக்கு ஆள் பிடிக்கச் செல்லும் முன் ரிமோ கிழவன் தன் குருநாதர் கொடுத்த திரவத்தைக் குடிக்கிறான்.





அதே சமயத்தில்
பூமி செல்ல தயாரிக்கப்பட்ட 'மாமேதை' என்னும் விண்கலத்தின் வெள்ளோட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.
மாமேதை தன் ரோபாட் கரங்களால் தனக்குத் தானே ரிப்பேர் செய்து கொள்ள முடியும்.
வாலின் சுழற்சியால் எந்தத் திசையிலும் தொடர்பு கொள்ள முடியும்.



மாமேதை நன்றாகப் பேசும். ஆனால் அவ்வப்போது கொஞ்சம் கோபம் வரும்.
மாமேதையை அமைத்த இயந்திர விஞ்ஞானியை பெருந்தலைவர் ஆபா பாராட்டி அவருக்கு ஒரு பரிசு கொடுத்தார்.
நன்றி ஆபா. நான் உங்கள் இயந்திர அடிமை. எனக்கேன் பரிசு?
மாமேதை என்பது நீர்தான்! இதோ இந்த ஆண்டுக்கான ஒஸ்காரி பரிசு.



இப்போது எல்லாமே தயார். கூப்பிடு ரிமோ கிழவனை!
வணக்கம் ஆபா. நான் சற்று தயக்கத்துடன் தான் பூமி செல்ல ஒப்புக் கொண்டுள்ளேன்.
பயப்பட வேண்டாம். அருமையான விண்கலம். இந்தா சாவி!
பெற்றுக் கொள்கிறேன் பிரபோ! ஏதோ நோவாவில் பென்ஷன் வாங்கி நிம்மதியாக இருக்கலாம் என எண்ணினேன்.
என்னை இந்த வயதில் வெளி கிரகத்துக்கு அனுப்புவது என்ன நியாயம்?
உன் மனதில் முணகுவது எனக்குக் கேட்கிறது. உன்னை அனுப்பி ஏதும் அபாயம் ஏற்பட்டு நீ அழிந்து போனால் நோவாவுக்கு நஷ்டம் ஏதும் இல்லை.
இந்த இயந்திரம் ஏன் நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறது?
—தொடரும்



COMICS PDF TIMES


ஆண்ட்ரமாட கேலக்ஸி நோவா கிரகத்தைவிட்டு
'மாமேதை' புறப்பட்டு...
ஒளியின் வேகத்தின் அருகே வந்து-
விநோதமான அஸ்ட்டிராய்டுகளையும்
எரிகற்களையும், விநோத
வடிவ கிரகங்களின்
வண்ண வண்ணப் பரப்புக்
களையும் கடந்து...


விண்கலம் பிரபஞ்ச விண்வெளி எல்லைக் கோட்டைக் கடந்து செல்கிறது.
ரிமோவின் கணக்கின்படி பிரபஞ்சத்தில் உள்ள எத்தனையோ கிரகங்களில் பூமி என்பது ஒரு புள்ளிதான்.
பூமியைப் போல இருப்பதாக எண்ணிக் கொண்டு ஒரு கிரகத்தில் இறங்க...
இரண்டு விநோத கண்கள் பார்க்கின்றன.
அந்தக் கண்களுக்குச் சொந்தமான உருவம் பிரமாண்டமான சிறகு விரித்த பறவை மிருகம் போன்ற உயிரினம்.



ஒரு வேளை தப்பா இறங்கிட்டோமோ?
ரிமோவை கரம் போல ஒன்று தொடும் போது...
ஆபத்து என்று பயந்து, ரிமோ தான் சாப்பிட்ட மருந்தை நினைக்க...
கண நேரத்தில் மறைந்து விடுகிறான்.
அந்த விநோத உயிர் வடிவம் வியப்புடன் மிச்சமிருந்த செல்லப் பறவை ச்சீக்கோவைப் பார்க்க-
தாத்தா என்னை விட்டுட்டுப் போயிட்டாரே!
-தொடரும்


முன்கதைச் சுருக்கம்:

நான்கு மனித பொம்மைகளைக் கடத்துவதற்காக, பூமிக்கு வந்த நோவா கிரகத்து ரிமோவுக்கு பாதி வழியில் பிரசினை.

# நோவா 9


கதை: சுஜாதா
படம்: மருது





COMICS PDF TIMES


ஆ!
ஹி! ஹி!!
என்ன தலைவரே! என்னை விட்டுட்டுப் போயிற முடியுமா? அவ்வளவு சுலபமா?
ஒரு விண்கலத்தைச் செலுத்து வதற்கு இரண்டு பேர் திறமையும் தேவையல்லவா? என் உதவி இல்லாம உன்னால அதிக தூரம் போக முடியாம இங்கேயே ராத்திக்கிட்டு இருந்திருப்பாய். துரோகம் பண்ணாதே.
விண்கலம் கிளம்பியது.


விண்வெளியில் இப்போது
சரியான மார்க்கத்தைப்
பிடித்து மிக வேகமாக
சென்று-
நீலப்பந்து போல இருந்த
பூமி என்னும் கிரகத்தை
நெருங்க, நெருங்க
அந்தப் பந்தின் வடிவம்
பெரிதாகி நீரும், நிலமும்
தோன்றின.
—தொடரும்.


# நோவா


முன்கதைச் சுருக்கம்

நோவா இளவரசிக்கு விளையாட்டு காட்ட, நான்கு மனித பொம்மைகளைப் பிடிப்பதற்காக மாமேதை என்னும் விண் கலம் பூமியை நெருங்குகிறது.


கதை: சுஜாதா பட**ம்**: மருது




தேர்ந்தெடுத்த இடம் ஒரு சோலை.
சரி! இங்க இறங்கலாம்
இந்த இடம் வேண்டாம்னு தோணுது.
இறங்கினா மாட்டிப்போம்
நீ உன் வேலையைப் பார்த்துக்கிட்டு சும்மாகிட.




COMICS PDF TIMES



நிலையத்தைச் சார்ந்த மிக அதிவேக ஜெட் விமானங்கள் புறப்பாட்டுக்குத் தயாராயின.



இதெல்லாம் சும்மா அடாசு விமானங்கள். நீ கவலைப் படாதே!
—தொடரும்


# நோவா (11)


முன்கதை: நான்கு மனித பொம்மைகளைக் கடத்துவதற்காக பூமியை நோக்கி வந்த நோவா கிரகத்தின் விண்கலமான மாமேதையை நம்மூர் விமானங்கள் தாக்குகின்றன.

கதை: சுஜாதா படம்: மருது




அந்த
ஏவுகணைகள்
எதிரிக் கலத்தின்
உஷ்ணத்தையோ
உலோகத்தையோ
இலக்காக
வைத்துக் கொண்டு
தொடர்பவை.
'மாமேதை'
விண்கலத்துக்கு
உஷ்ணமும்
இல்லை. அதன்
அயான் எஞ்சின்
உலோகமும்
இல்லை.
பாலிமர்.
அதனால் தாக்க
வந்த
ஏவுகணைகள்
திசை மாறின.
மாமேதை
விண்கலம்
தன்னுடைய
எலக்ட்ரானிக்
கண்களால்
நோக்கி
நகைத்தது.



பூமியின் விமானப்படையினர் முதல் தாக்குதலில் தோல்வியுற்றனர்.
ஸ்ஸ்ஸ...
அடுத்து தரையிலிருந்து வான் நோக்கிப் பாயும் மிகப் பெரிய ஏவுகணை ஒன்று வீசப்பட்டது.
ஸ்ஸ்ஸ்ஸ...
கிழவன் ரிமோவும், ச்சீக்தோ பறவையும் ஆர்வத்துடன் தன் விண்கலத்துக்குள்ளிருந்து அதை நோக்க—


ஒருவேளை நம்மை வந்து தாக்கிடும் போலிருக்கு
கொஞ்சம் பெரிசா இருக்கு ஏவுகணை. நான் முன்னமே சொன்னேனில்ல. நேராகப் போய் இறங்க வேண்டாம். கண்ணுக்குத் தெரியாம இருட்டுல...
...நைலா நடுவி இறங்கியிருக்கணும்.
என்ன செய்திருக்கணும்னு சொல்லாத. என்ன செய்யணும்னு சொல்லு!
புத்திசாலி இயந்திரப் பறவையான ச்சீக்கோ கிழவன் சிமோவுக்கு ஆலோசனை சொல்கிறது.
—தொடரும்

(12)


முன்கதை: இளவரசி விளையாடுவதற்காக மனித பொம்மைகளைக் கடத்த பூமி வரும் மாமேதை விண்வெளிக்கலத்தை பூமியின் ஏவு கணைகள் தாக்குகின்றன. ச்சிக்கோவின் ஆலோசனையை ரிமோ கேட்கிறான்.

கதை: சுஜாதா படம்: மருது




ரிமோ
பட்டனைத்
தொட...
அந்த ராக்கெட் வெடித்து நூற்றுக் கணக்கான துகள்களாகச் சிதறி...
பூமியிலுள்ள ராடார் திரையிலிருந்து மறைந்தது.
விமானப் பாதுகாப்பு அதிகாரிகள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.
இப்போ இருந்துச்சி. காணோமே!
ஒரு வேளை ராடாரில் கோளாறு இருக்குமோ?


நான் சொன்ன யோசனை சரிதானே!
எனக்கும் எந்த பட்டனை அமுக்குவது என்று தெரியும்.
பொய் சொல்கிறாய்! பரவாயில்லை. என் கடமை உனக்கு உதவி செய்வதே.
அடுத்து என்ன செய்ய வேண்டும்? சொல்.
ராடார் திரையில் ஏவுகணையும் மறைந்து, வெளிக் கிரகத்து விண்வெளிக் கப்பலும் மறைந்து விட்டது.


ஸ்சோய்ங்
ரீசீக்கோவின் யோசனைப்படி
கிழவன் ரிமோ
ஒரு கிளி ஜோசியனாகவும்,
ச்சீக்கோ கிளியாகவும்,
மாமேதை என்றும்
விண்வெளிக் கப்பல் கிளிக்
கூடாகவும் உருவம் மாறி...
... பூமியிலுள்ள
அந்தப் பூங்காவிற்கு
வந்து இறங்கினார். எந்த
நிமிஷத்திலும் எந்த
வடிவமாகவும் மாறக்கூடிய
சக்தி இவர்களுக்கு
உண்டு.
—தொடரும்

# நோவா

## 13

கதை: சுஜாதா
படம்: மருது


**முன்கதை:**

அந்தப் பார்க்கில் வந்து இறங்கும் கோமாளி போன்ற கிளி ஜோஸியனைப் பார்த்தால் அவன் நோவா கிரகத்திலிருந்து மனிதர்களைக் கடத்திச் செல்ல வந்த ரிமோ என்னும் மாயா ஜாலக் கிழவன் என்று யாரும் சொல்ல முடியாது.




COMICSPDFTIMES


டாக்டர் இளங்கோவுக்கு சந்தேகம்.
ஒன் மினிட். எனக்கு என்னமோ...
லெட்ஸ் ஹேவ் ஃபன் யார்! என்னதான் சொல்றதுன்னு பார்க்கலாமே!
யாராவது சில்லறை வெச்சிருக்கீங்களா?
பிள்ளைகளே, சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறேன். இல்லை... இல்லை வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எந்தமாதிரி ஜோசியம் வேண்டும்?
எந்த ஜோசியமா இருந்தாலும் நாங்க நம்பப் போறதில்லை.
எதிர் காலத்தைச் சொல்லுமா உங்க கிளி?


டாக்டர். இளங்கோ, கணிப்பொறி விற்பன்னன் ரவீந்தர், விளம்பரக் கம்பெனியில் பணிபுரியும் பாலசுப்ரமணியம், அதே கம்பெனியில் சித்திரங்கள் வரையும் ராஜேஸ்வரி ஆகிய நால்வரும் ஒருவித எச்சரிக்கைபோல் உணர்ந்தார்கள்.
இன்னும் சற்று நேரத்தில் ஒரு சம்பவம் நடக்கப் போகிறது.
ரிமோ சொல்வதை அவர்கள் கட்டுண்டதுபோல் கேட்டுக் கொண்டிருக்க-
உங்கள் நால்வருக்கும் ஒரு பிரயாணம் வரப்போகிறது.
என்ன பிரயாணம் என்று அவர்களுக்குக் கேட்கத் தோன்றவில்லை.



நீங்கள் நால்வரும் பூமியில் வாழ்ந்தது போதும்.
மெல்ல மெல்ல அவர்கள் முகத்தில் கிலி பரவத் துவங்க...
இது ஏதோ கிளி ஜோசியம் இல்லை என்பதை முதலில் டாக்டர் இளங்கோ உணர்ந்தார்.
என் அன்புள்ள பேரப் பிள்ளைகளே, உங்கள் நால்வரையும் நடத்திச் செல்ல உத்தரவு தாருங்கள்!
—தொடரும்

# நோவா

கதை: சுஜாதா


14


முன்கதை:

பூமியில் தோட்டத்தில் வந்து இறங்கினர் ஒரு கோமாளிக் கிழவனும், அவனுடைய கிளியும், கிளிக் கூண்டும். அவர்கள் நோவா கிரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அந்த நால்வருக்கும் தெரியாது.


படம்: மருது




இதில்தான் அடைத்துச் செல்வேன்.
கூண்டு பேசுகிறது.
என் பெயர் மாமேதை
டாக்டர், இதில் ஏதோ சூது இருக்கிறது. கிளி பேசுவதைப் பார்த்திருக்கிறேன். கிளிக் கூண்டே பேசுகிறது!
வென்ட்ரிலாக்விசம் முறையைப் பயன்படுத்துகிறார்கள்.


என் இனிய தமிழ் மக்களே! நேரம் விரயமாகாமல் என்னுடன் வருகிறீர்களா?
கிழவன் திமிராகப் பேசுகிறான்.
கோபத்தில் ரிமோவின் கழுத்தை நெரிக்கலானார் பாலசுப்ரமணியம்.
ரிமோ. இவனைத் தாக்கவா?
இரு ச்சீக்கோ!
நண்பனே! உனக்கு என்னுடைய கழுத்துதானே வேண்டும்?


கிழவன் தன் கழுத்தைக் கழற்றி பாலசுப்ரமணியத்தின் கையில் கொடுக்க–
தலையை பாலசுப்ரமணியம் கீழே போட்டுவிட–
கை வேண்டுமா?
–தொடரும்




கதை: சுஜாதா
படம்: மருது
15
நால்வரும் மிகவும் பயப்பட்ட நிலையில் ஒரு ஓரத்தில் ஒதுங்கிக் கொண்டு தமக்குள் பேசிக்கொள்கிறார்கள்.
இது ஏதோ அமானுஷ்ய சக்தி...
நான் மனுஷனே இல்லை.
பின் நீ யார்?
நோவா கிரகத்தின் அரசாங்க ஊழியன். எங்கள் இளவரசிக்கு நான்கு மனித பொம்மைகள் வேண்டும். உங்கள் நால்வரையும் தேர்ந்தெடுத்திருக் -கிறோம்.


எங்களை எப்படி தேர்ந்தெடுத்தாய்?
எங்க ஊர் தொலைக் காட்சிப் பெட்டியில் உங்களைப் பார்த்த இளவரசிக்கு உங்களைப் பிடித்துப் போய்விட்டது.
அவர்கள் மீண்டும் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள்.
ஏதாவது தந்திரம் செய்து தப்பிக்க வேண்டும்.
போய்த்தான் பார்க்கலாமே! தாத்தா! எத்தனை நாளைக்கு வரவேண்டும்?




COMICS PDF TIMES


நண்பர்களே! நேரத்தை விரயம் செய்ய வேண்டாம்.
உங்களை யாரும் சம்மதம் கேட்கப் போவதில்லை. நீங்கள் எங்களுடன் வருகிறீர்கள். அவ்வளவே!
எனக்கு பயமாக இருக்கிறது!
எப்படி வருவதாக உத்தேசம்?
ரிமோ அவர்களை சிறிய அளவில் சுருக்கி அவர்கள் கொண்டு வந்திருக்கும் பிக்னிக் பாஸ்கெட்டில் அடைக்கிறான்.
—தொடரும்.

# ஜுராவா


16

கதை: சுஜாதா    படம்: மருது




தப்பிக்க வழியே கிடையாது. உங்களை விட மிக மிக அதிக மூளை வளர்ச்சி உள்ளவர்கள் நாங்கள்.
நாங்கள்னா யாரு?
'ஆன்ரமீடா'வில நோவா என்கிற கிரகத்திலிருந்து வந்திருக்கோம்.
இன்னும் சில நிமிஷங்களில் புறப்படுகிறோம்.


இந்த சைலஸ் ரொம்ப அசௌகரியமா இருக்குது. நாங்க தப்பிக்க முயற்சிக்க மாட்டோம். எங்களை நார்மலாக்குங்க.
எனக்கும் அசௌகரியமா இருக்குது!?


ரிமோ எல்லோரையும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தான்.
ஓவ்!
—தொடரும்


# நோவா

முன்கதைச் சுருக்கம்: இளங்கோ, பால சுப்ரமணியம், ரவீந்தர், ராஜேஸ்வரி நால்வரும் நோவா கிரகத்தில் இருந்துவந்த ரிமோ கிழவனால் கடத்தப்படும் நிலையில் மாமேதை என்னும் விண்கலத்தினுள் வியப்புடன் பார்க்கிறார்கள்.


17


கதை: சுஜாதா

படம்: மருது




எங்கே போகிறோம்?
இன்னும் புறப்படவில்லை.
பூமி என்னும் அற்ப கிரகத்தின் நண்பர்களே! நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்.
சும்மா வளவளன் பேசிக்கிட் இருக்கா புறப்பட வேண்டிய காரியத் பாரு.
எங்கள் நோவா கிரகத்தின் ராஜகுமாரி உங்களை விளையாட்டுப் பொருள்களாக ஏற்க விரும்பியுள்ளார். எங்கள் மகத்தான சக்தியை உங்கள் மனித சக்தியால் வெல்லவே முடியாது.


மாமேதை என்னும் விண்கலம்
மௌனமாக அதிவிசையுடன் புறப்பட்டது.



ஒரு சில கணங்களில் பூமியி
விளிம்பு தெரியு
...வழியில் தெரிந்த பற்பல அஸ்ட்டிராய்டுகளை
கடந்து விண்வெளியில் விடுபட்டுப் பயணிக்க.
ஆபா
அவர்களுக்காகக்
காத்திருந்தார்.
—தொடரு

# நோவா 18


முன்கதை:


டாக்டர் இளங்கோ, பாலசுப்ரமணியம், ரவீந்தர், ராஜேஸ்வரி ஆகிய நால்வரும் ரிமோ கிழவனால் கடத்தப்பட்டு நோவா கிரகத்திலிருக்கும் ஆபாவின் மாளிகைக்கு கொண்டு வரப்படுகிறார்கள்.


கதை: சுஜாதா படம்: மருது




COMICS PDF TIMES


நால்வரும் வியப்பிலும்; களைப்பிலும்
பிரமித்து இருக்க—
ஆபா தன்னுடைய
ஆலோசனைக் குழுவிலிருந்து
'மோ' என்பவரை
விளித்து தன் கவலையைச்
சொல்கிறார்.



மோவுக்குத் தெரிந்த
ஒரே ஒரு குறுக்கு வழி
'சந்தேகத்திலிருக்கும் போது
மயக்கத்தில் ஆழ்ந்து'
என்பதே. ரிமோ கிழவன்
விளக்கிச் சொல்வதற்குள்
நால்வரும் பொத் பொத்தென்று
மயங்கி விழ—



ஆபாவுக்கு மகிழ்ச்சி!
லைவரே!
வர்களிடமிருந்து
தொந்தரவு
துவும் இனி
ருக்காது.
வர்களை
தற்காக
கொண்டு
ந்திருக்கிறோம்?
—தொடரும்

# நோவா 19


முன்கதை: நோவா கிரகத்தின் ராஜகுமாரியின் விருப்பப்படி ரிமோ நான்கு பூமி மனிதர்களைக் கடத்திக் கொண்டு வந்துவிட்டான்.


கதை: சுஜாதா படம்: மருது




ஆபாவிடம் சென்ற ராஜகுமாரி நால்வரையும் மயக்க நிலையில் பார்த்து
இவர்களை எழுப்புங்கள்.


ராஜகுமாரி அவர்களைத் தொட்டுப் பார்த்து வியப்படைகிறாள்.


நால்வரும் சற்றே பதற்றத்துடன் தமக்குள் பேசிக் கொள்கிறார்கள்.
புரியவில்லையே!
ச்சீக்கோ என்னும் இயந்திரப் பறவைக்குப் புரிகிறது.
இவர்கள் இங்கிருந்து தப்பித்துக் கொள்ள விரும்புகிறார்கள்.


ஆபா கட்டளையிடுகிறார்.
நம்மூர் பழகும்வரை இவர்களை சிறைப்படுத்தி வைக்கலாம்.
நோவாவில் சிறை விநோதமாக இருந்தது.
—தொடரும்.


# நோவா 20


கதை: சுஜாதா

படம்: மருது

முன் கதை:


நோவா கிரகத்தில் சிறை பிடிக்கப்பட்ட நான்கு மனிதர்களும் தப்பிக்கும் வழிகளை யோசிக்கிறார்கள்.




லுக்! சம்திங் இஸ் ஹேப்பனிங்
டாக்டர்! யூவார் எ ஜீனியஸ் வெளியே போக வழி கிடைச்சிருச்சு
அந்தச் சிறையிலிருந்து அவர்கள் தப்பிக்கும் அளவிற்கு ஒரு நீள்சதுர இடைவெளி தெரிய, அவர்கள் அதன்மூலம் வெளிவர யோசிக்கையில்
ரிமோ கிழவன் வருகிறான்.




COMICS PDF TIMES


நால்வரும் அங்கங்கே இயக்கமில்லாமல் உறைந்து விருகின்றனர்.
—தொடரும்


# நோவா


கதை: சுஜாதா


படம்: மருது

**21**

முன்கதை: நோவா இரகத்துக்குக் கடத்தப்பட்ட நான்கு மனிதர்களும் அந்தக் கிரகத்தின் உயர்தர டெக்னாலஜிக்கு எதிராக எதுவும் செய்ய இயலவில்லை.




ரிமோ கிழவன் வந்து அவர்களை நோக்க-
ரிமோ ஒண்ணை மறந்துவிட்டோம்.
என்ன?
இவர்களுக்கு உணவு என்று ஒன்று தர வேண்டும். இல்லையேல்...
இல்லையேல்...?
இறந்து விடுவார்கள்.
ரிமோ யோசித்து-


அவர்களை விடுவிக்கிறான்.
நம்ம ஆகாரம் எதுவும் இவர்கள் சாப்பிடுவார்களா?
உங்களுக்கு பசிக்கவில்லையா? ஜெல் சாப்பிடுவீர்களா?
முதலில் உன்னை வெட்டி சாப்பிட வேண்டும் போலிருக்கிறது.
என்னை வெட்டுவதில் பயனில்லை.
நான் ஜொர்கோனியம் என்னும் தனிமத்தால் ஆன இயந்திரக் கிளி.



அவர்களைப் பார்க்க இளவரசி வினோ வருகிறாள்.
என்னைக் காப்பாற்றுங்கள்
எங்களை இந்தக் கிழவன் கொலைப்பட்டினி போட்டு அடைத்து, உறைய வைத்து சித்ரவதை செய்தான். சர்வதிரக சபையில் ஒரு புகார் தருவோம்..
என்னுடன் விளையாட வருவீர்களா?
என்ன விளையாட்டு?
தலை மாற்றம்!
—தொடரும்


# நோவா 22

நோவா இளவரசி பூமி பிரஜைகளுடன் 'தலை மாற்றம்' விளையாட்டு விளையாட விரும்புகிறாள்.

கதை: சுஜாதா  படம்: மருது




பயப்படாதீங்க! உயிருக்கு ஒண்ணும் ஆகாம பாத்துக்கறோம்.
ரிமோ கிழவன் தலைமாற்றத்துக்கு ஆணையிட...
...இன்னும் உயிரோடத்தான் இருக்கோமே...


ராஜகுமாரி கைகொட்டிச் சிரித்து-
மறுபடியும் பாருங்க
அவர்கள் மீண்டும் சுயரூபத்துக்கு வருகிறார்கள்.



அந்த விளையாட்டு முடிந்ததும் நால்வரும் தனியாக இருக்கையில்...
நம்மை விளையாடும் பொம்மையாக்கி விட்டார்கள்.
ஒரு ஐடியா காதோட சொல்றேன்.
அவர்கள் ரகசியம் பேசுவது அனைத்தும் ரிமோவின் அறையில் கேட்கிறது.
—தொடரும்.

**கதைச் சுருக்கம்**

தப்பிப்பதைப் பற்றி அவர்கள் ரகசியமாகப் பேசுவதெல்லாம் ரிமோ கிழவனுக்குத் தெளிவாகக் கேட்கிறது.

# நோவா 23

கதை: சுஜாதா படம்: மருது




அது வர்ச்சுவல் ரியாலிட்டி படி உருவெளித் தோற்றம்.
அது என்ன தோற்றமோ? நாம எப்படி இங்கிருந்து தப்பிக்கிறது?
நீங்க தப்பிக்கவே முடியாது. எங்களுக்கு அதாவது ராஜகுமாரிக்கு விளையாட்டு அலுக்கும் வரை நீங்க இங்கேயே இருந்தாகணும்.
போச்சுரா. இப்ப என்ன செய்யலாம்?
அழுறது!



அவர்கள் நால்வரையும் நோவா கிரகத்தில் காட்சிப் பொருள்களாக வைக்கிறார்கள்.
மதிய உணவு, சகிக்காத உணவு.
மாலை ராஜகுமாரி விளையாட வருகிறாள்.
உன் பேர் என்ன?
வினோ. உன் பேர்?
ரவீந்திரன்
எங்களை எப்ப விடுதலை பண்ணுவீங்க ராஜகுமாரி?
எப்பவும் இல்லை.


இரவில் அவர்கள் தப்பிக்க முயல இன்ஃப்ராரெட் கதிர்கள் எச்சரிக்கை தருகின்றன.
இதன்டையில் ரிமோவுக்கும் ச்சீக்கோவுக்கும் சண்டை ஏற்படுகிறது.
இவ்வளவு தூரம் உனக்கு உதவி செய்தேனே! எனக்கு றக்கை ஒண்ணு ரிப்பேர் செய்யணும். செய்ய மாட்டேங்கறியே!
இருக்கிற றக்கை போதும். ரிப்பேருக்கெல்லாம் இந்த வருஷம் பட்ஜெட் இல்லை.
அப்படியா? இரு. உன்னை ஒரு வழி பண்றேன்.
—தொடரும்


முன் கதை: ச்சிக்கோ பறவைக்கு ரிமோ கிழவன் மேல் கோபம். அதற்கு இறக்கை ரிப்பேர் செய்ய மறுப்பதால் மனிதர்களுக்கு உதவ திரும்பி வருகிறது.

# நோவா

கதை: சுஜாதா படம்: மருது 24



ச்சிக்கோ பறந்து வந்து டாக்டர் தோளில் உட்கார்ந்து கொண்டு தன் இறக்கையை அலகால் திருத்தியது.




இந்த ரிமோ கிழவனை என் இறக்கையை பழுது பார்க்குமாறு சொல்கிறேன், செய்யவே இல்லை.
பட்ஜெட் இல்லையாம்.
டாக்டர் அதை ஆராய்ந்து—
உன் இறக்கையில் என்ன ப்ராப்ளம்?
ச்சீக்கோ இறக்கையை தனியாகக் கழற்றிக் கொடுத்து—
பேரிங்கில் சத்தம் வருகிறது.



ராஜேஸ்வரி பயப் பார்வையுடன்
வலிக்கலை?
வலிக்காது. நான் ஒரு இயந்திரப் பறவை.
டாக்டர், கம்ப்யூட்டர் விற்பன்னன் ரவீந்திரனிடம் ச்ஷீக்கோவை பரிசோதிக்கச் சொல்கிறார். அவன் அதைப் பிரித்து சோதித்து—
சிம்பிள் டாக்டர். ஒரு லிமிட்டர் டையோடு போயிருக்கிறது.
ஸ்பேர் கிடைக்குமா?
ஸ்பேர் இருக்கும். கிழவன் தரமாட்டான்.


இது இல்லாமலேயே கூட இறக்கை வேலை செய்யும்.
ரவீந்திரன் அதை முன்போல எடுத்துவிட-
இப்ப பாரு
ச்சீக்கோ உற்சாகமாகப் பறந்து பார்த்து சந்தோஷத்துடன்-
சரியா இருக்கு.
டாக்டர் உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யறேன்.
இந்த நோவா கிரகத்திலிருந்து எப்படி தப்பிப்பது சொல்லு.
—தொடரும்

**25** கதை: சுஜாதா

ச்சிக்கோ பறவை அவர்கள் நால்வருக்கும் புத்தி சொல்கிறது.

படம்: மருது




இப்போது நீ பேசுவது கூட அவர்களுக்கு கேட்குமல்லவா?
அதனால்தான் சொல்கிறேன். உங்களுடன் விளையாடுவது எங்கள் ராஜகுமாரி வினோவுக்கு அலுக்கும் வரை நீங்கள் இங்கே இருந்தாக வேண்டும்.
தப்பிக்க வழி கேட்டால் தாமதிக்க வழி சொல்கிறதே!


இது என்ன?
இங்கே சொல்ல முடியாது. டாய்லட் அறைக்கு வரவும்
ர்ரீக்கோ கண்ணடித்துவிட்டுச் செல்கிறது.
நோவா கிரகத்தின் ஹை-டெக் டாய்லட் அறை.


இந்த மேஜையில்தான் ஸென்ஸார் பகுதாகி இருக்கிறது. பத்திரமாகப் பேச முடியும்.
இப்போது சொல்லு!
விஞ்ஞானத்தை வெல்ல முடியா விட்டாலும் வேறு வழி ஒன்று இருக்கிறது.
என்ன?
— தொடரும்

# நோவா 26

முன் கதைச் சுருக்கம்:

தப்பிக்க வழியைச் ச்சிக்கோ சொல்வதற்கு நோவாவில் அகப்பட்ட மனிதர் நால்வரும் ஆவலுடன் காத்திருந்தார்கள்.

## கதை: சுஜாதா படம்: மருது




இப்போ என்ன செய்ய வேண்டும்?
நீ ராஜகுமாரியை காதல் பண்ண வேண்டும்.
நீ ஜிஜோவை.
அது யார்?
இந்த நாட்டு இளவரசன். அடுத்த பட்டத்து ராஜா.
எப்படிக் காதலிப்பது?
அதெல்லாம் எனக்குத் தெரியாது. அதில்தான் பூமிமக்கள் தேர்ந்தவர்கள் என்று காலக்ஸி கலைக்களஞ்சியத்தில் படித்தேன்.
டாக்டர் ஏதாவது வழி சொல்லுங்க.


காதலுக்கு முதல்வழி முகஸ்துதி
ஜிஜோ எப்படி இருப்பான் என்று பார்த்ததே கிடையாது.
இன்றுதான் கிரக வேட்டைக்குச் சென்று திரும்பி வருகிறான். உங்களைச் சந்திக்க வரப் போகிறார்கள்.
அவர்கள் இருவரும் வருகிறார்கள்.
இவனையா காதலிக்கணும்?
இது என்ன?
கண்ணாடி! கண்ணாடி!





COMICS PDF TIMES


# நோவா 27

முன்கதை:

நோவா அரசகுமாரன் ஜீஜோவுக்கும் அங்கு சிறைப் பட்டிருக்கும் பூமி பிரஜை ராஜேஸ்வரிக்கும் முதலில் மோதல். அதன் பின் காதல்.

கதை: சுஜாதா படம்: மருது




ராஜகுமாரன் 'சீன்த்ரோ' என்கிற பிரம்மாண்ட வாத்தியத்தை வாசித்துக் காட்ட—
என்ன ஒரு அபஸ்வரம்!


அதேசமயம், கம்ப்யூட்டர் விற்பன்னன் ரவீந்திரனும், ராஜகுமாரியும் மற்றொரு இடத்தில்—
நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்.
அழகு என்பது என்ன?
அதை வார்த்தைகளில் சொல்ல முடியாது.
ஒரு கவிதையாக வேண்டுமானால் எழுதித் தருகிறேன்.
சரிதான். இருவருமே தங்கள் காதல் விளையாட்டை தீவிரமாக துவங்கி விட்டார்கள்.


எப்படி இருக்கிறது என் வாசிப்பு?
பிரமாதம். இது போன்ற பாட்டை நான் கேட்டதில்லை.
உனக்கு வேறென்ன வேணும்?
—தொடரும்

# 28

முன் கதை

உனக்கு வேறென்ன வேணும் என்று இளவரசன் கேட்டதும்...

**கதை: சுஜாதா படம்: மருது**




எங்கள் ஊர் வழக்கம் பெண்தான் ஆண் மடியில் கிடக்க வேண்டும்.
அப்படியா?
எங்கள் ஊரை நீ பார்க்க வேண்டாமா?
பார்க்க ஆசைதான். ஆனால்...
மற்றொரு அறையில்—
ஜேனா நீ எங்கள் ஊரைப் பார்க்க வேண்டாமா?
பார்க்க ஆசைதான். ஆனால்...



ராஜகுமாரி வினோவை நம் பூமிக்கு வர சம்மதிக்க வைத்து விட்டேன்.
நானும் ராஜகுமாரனை நம் பூமிக்கு வர சம்மதிக்க வைத்து விட்டேன்.
உத்தமம்! அவர்கள் அங்கே பத்து நிமிஷத்துக்கு மேல் உயிர் வாழ இயலாது!
ஏன்?


இவர்கள் மெடபாலிசமே வேறு...
முதலில் இவர்கள் உயிர் வாழ்வதை நிலை நிறுத்துவது எது என்று கண்டு பிடிக்க வேண்டும்.
அது எது என்று எப்படித் தெரிய வரும்?
ச்சீக்கோ பறந்து வருகிறது.
நான் சொல்கிறேன்.
—தொடரும்.

முன்கதை:
ச்சிக்கோ பறந்து வந்து 'நான் சொல்கிறேன்' என்றது. எதைப் பற்றி?


(29)


கதை: சுஜாதா படம்: மருது




அதனால் ஆறுமாதத்துக்குள் திரும்பி வந்தால் பூமிக்கு எங்கள் பிரஜைகளை அழைத்துச் செல்வதில் தப்பில்லை.
ச்சீச்கோ பறந்து செல்லும் போது—
இதை நான் சொன்னேன் என்று கிழவனிடம் சொல்லாதே. இறக்கையை முறித்து விடுவான்.
டாக்டர், எனக்கு ஒரு யோசனை.
எனக்கும் அதே யோசனைதான்!
இவர்கள் உயிர்நிலை போக்க பவர்பாக்கை நீக்கிவிட்டால் செயலிழந்து விடுவார்கள்.



எப்படி நீக்குவது?
இதை ச்சீக்கோவிடம் கேட்காமல் விட்டுவிட்டோம்.
இடையில்- இவர்கள் பேச்சை ரிமோ ஒட்டுக் கேட்டிருக்கிறான். ச்சீக்கோவைத் துரத்திப் பிடிக்கிறான்.
நன்றி கெட்ட பறவையே...
நான் பறவையில்லை.
நன்றி கெட்ட இயந்திரமே! உன்னை அக்கக்காகப் பிரித்துப் போட்டு விடுகிறேன்.
ச்சீக்கோ தனித்தனியாக உதிர்த்து பிரிக்கப்பட, அதன் கடைசி வாசகமாக-
போய் வருகிறேன். அடிமை வாழ்விலிருந்து விடுதலை.


நம் நண்பர்களுக்கு ஒரு பார்சல் பரிசுப் பொருளாக வருகிறது.
சிமோவின் அன்பளிப்பு.
திறந்து பார்க்க—
ச்சீக்கோ!
ச்சீக்கோவின் மிச்சங்கள்.
ச்சீக்கோ! தியாகப் பறவையே எங்களுக்காக உயிர் துறந்தாயா? உனக்கு வலித்ததா?
அதற்கு வலியெல்லாம் கிடையாது.
—தொடரும்


முன்கதை:
நம் பூமி மனிதர்களுக்கு நோவாவில் உதவிய சிசிக்கோ இயந்திரப் பறவையை ரிமோகிரிவன் கோபத்தில் அழித்து விடுகிறான்.
நோவா 30
கதை: சுஜாதா
படம்: மருது
அக்கக்காக உள்ள சிசிக்கோவை இளைஞன் கவனிக்கிறான்
டாக்டர் இதற்குள்ளே C.P.U போல ஏதோ ஒன்று உள்ளது
முதலில் இந்த அறையில் உள்ள ஆ ஆ ஆ...
அவனை மேலே பேச விடாமல்
வா, டாமலைப் போகலாம்


டாய்லெட் அறையில்—
இங்கேதான் சென்சார் இல்லை. என்ன சொல்ல வந்தாய்? சொல்லு.
இந்தப் பறவையை உயிர்ப்பிக்க முடியும்.
ச்சீக்கோவின் மிச்சப் பகுதியை எடுத்து—
டாய்லெட்டில் உட்கார்ந்து அதை நிரட—
அதிலிருந்து சில சப்தங்கள்!
ச்சீக்கோ?
என்ன?
உயிர் உள்ளது டாக்டர்!
சீக்கிரம் சொல். அவர்களின் உயிர்நிலையான பவர் பாக் எங்கே உள்ளது?


விலா எலும்புக்கருகில் ஒரு மச்சம் போல இருக்கும். அது ஒரு பட்டன். அதை விரலால் அழுத்தினால் பாட்டரி வெளியே வந்துவிடும்.
உடனே செயலிழந்து விடுவார்களா?
அப்படியே உறைந்து நிற்பார்கள் அடுத்த பாட்டரி பொருத்தும் வரை.
அவர்கள் பேசிக் கொண்டிருக்க-


இரு காவலர்களும், ரிமோ கிழவனும் அவர்களை சட்டென்று பின்னாலிருந்து தாக்கி—
அகப்பட்டாயா? நான் நினைத்தேன் என்னடா இரண்டுபேரும் ஒரே டாய்லெட் போகிறார்கள் என்று.
ர்ரீக்கோவின் மிச்சத்தை ரிமோ மிதித்து அழிக்க—
இருவரையும் கொன்று விடுங்கள். இனி விட்டால் ஆபத்து.
காவலர்கள் லேசர் துப்பாக்கிகளை அவர்கள் மேல் குறிவைக்கி -றார்கள்.
—தொடரும்.

# 31


# நோவா

கதை: சுஜாதா

படம்: மருது


முன்கதை

காவலர்கள் லேசர் துப்பாக்கிகளால் நம் பூமி மனிதர்களை சுடப்போகும் தருணம்.




இவனுக்கும் ஒரு சூட்சுமம் இருக்க வேண்டும். விலாப்பக்கம் எங்காவது பாட்டரி 'பவர் பாக்' இருக்க வேண்டும்.
ரிமோ கிழவனை டாக்டர் பாலசுப்ரமணியம் அணுக—
வேண்டாம். வேண்டாம். என் சூட்சுமத்தை நீக்கி விடாதீர்கள்.
அசுரனுடைய உயிர்நிலை போல் இவர்களுக்கெல்லாம் சக்திமையம் இருக்கிறது.
உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள் தருகிறேன்.
முதலில் ச்சீக்கோவை உயிர்ப்பிக்க வேண்டும்.
அதற்கென்ன! ஆளுக்கொரு ச்சீக்கோ தருகிறேன்.


ஒன்று போதும்.
ரிமோ ச்சீக்கோ பறவையை மறுபடி உயிர்ப்பிக்கிறான்.
ச்சீக்கோ தோளில் உட்கார—
நன்றி பூமி மனிதர்களே! இந்தச் செயலுக்கு நான் உங்களுக்கு என்ன உபகாரம் செய்ய வேண்டும்?
ரிமோ கிழவனை நாங்கள் சொல்வதை எப்போதும் கேட்க ஒரு வழி செய்ய வேண்டும்.
அவ்வளவு தானே! அதற்குத்தான் 'ரிமோட்டர்' இருக்கிறதே!


ச்சீக்கோ பறந்து சென்று ஒரு சாதனத்தை எடுத்து வருகிறது.
'ரிமோட்டரா?
இது இரண்டு பாகங்கள் கொண்டது. கிழவனின் சக்திப் பெட்டகத்தை நீக்கிவிட்டு இதைப் பொருத்தி விட்டால் எப்போது வேண்டுமானாலும் இந்த 'ரிமோட்டரை' இயக்கி செயலிழக்கச் செய்து விடலாம்
கடன்காரப் பறவையே, அத்தனை ரகசியங்களையும் சொல்கிறாயே!
—தொடரும்


முன்கதை

ரிமோ கிழவனை 'ரிமோட்டரில்' போட்டதில் அவன் பூமி மனிதர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட...

கதை: சுஜாதா **32** படம்: மருது




இளவரசியிடம் ரவீந்திரன் விடை பெறுகிறான்.
உங்களை விளையாட்டு பொம்மைகளாக கருதியதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.
பிரபஞ்சத்தில் யாரும் அடிமையாகவோ காட்சிப் பொருளாகவோ இருப்பதை விரும்புவதில்லை. நான் போய் வருகிறேன் இளவரசி
முதன் முதலாக காதல் என்றால் என்னவென்று அறிந்து கொண்டேன்! காதல் பிரிவு... துயரம்...
என்னுடன் வந்து விடுங்களேன்
இயலாது.


மற்றொரு அறையில்–
எப்போதாவது பூமிக்கு வாருங்களேன்.
எங்கள் நோவா நாட்டுத் தூதுவராக வருகிறேன்.
ராஜேஸ்வரி விடை பெறுகிறாள்.
பூமியை நோக்கி நோவா நாட்டு விண்கலம் புறப்படுகிறது.
விண்வெளியைக் கடந்து–
மீண்டும் அவர்கள் கவர்ந்து செல்லப்பட்ட பார்க்கிலேயே நால்வரையும் இறக்கிவிட்டுச் சென்றுவிடுகிறது.
நால்வரும் டாட்டா காட்டுகிறார்கள்.


அப்போது அவர்களை விசாரிக்க உறவினர்கள் வருகிறார்கள்.
எங்கே போய்விட்டீர்கள்? எங்கெல்லாம் உங்களை தேடுவது!?
அப்பா நாங்கள் சொல்வதை நீங்கள் நம்ப மாட்டீர்கள். நோவா என்று...
டாக்டர் அவன் மேலே சொல்வதைத் தடுத்து நிறுத்தி ரகசியமாக—
நாம் நடந்ததைச் சொன்னால் யாரும் நம்பப் போவதில்லை.
ஒன்றுமில்லை. சும்மா மகாபலிபுரம் வரை பிக்னிக் போயிருந்தோம்.
—முற்றும்.